**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர்.**

**முன்னிலை : திரு.ஆர்.புவனேஷ்குமார் B.A., L.L.B (Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கடலூர்.**
**2026– ம் ஆண்டு மே மாதம் 21–ஆம் நாள்**

குற்றப்பல்வகை மனு எண்.310/2026
ஆண்டுடிப்பட்டிகை வழக்கு எண்.189/2016

1) ராஜ்குமார் த.பெ ராமதாஸ்
2) சேஷாசலம் த.பெ பலராமன்
3) தசரிநாராயணன் த.பெ சங்கர் ...மனுதாரர்கள் / எதிரிகள்

––எதிர்––

அரசுக்காக,
கடலூர் புதுநகர் காவல் நிலையம்
குற்ற எண். 616/2015 ...குற்றமுறையிடுபவர் / எதிர்மனுதாரர்

இம்மனு 24.01.2026 அன்று நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.இளஞ்செழியன் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2, திருமதி.ஜோதிரத்னா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி தரப்பில் குற்றவியல் நடைமுறைப் சட்டப்பிரிவு 91–ன் கீழ் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:–**

கடலூர் புதுநகர் காவல் நிலையக் குற்ற எண்.616/2015–ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 353 மற்றும் 506(ii) of IPC கீழான வழக்கை 09.09.2016 அன்று இந்நீதிமன்ற

கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது என்றும் இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் அசா.1ஐ குறுக்கு விசாரணை செய்யவேண்டி கீழ்கண்ட ஆவணங்கள் தேவைப்படுகிறது என்றும், எனவே இந்நீதிமன்றம்

1) Original AR Entry Book from 1.00 PM to 10.00 PM on 26.10.2025 from Cuddalore Goverment Hospital,

2) Call details records of Doctor for emergency ward on 1.00 PM to 10.00 PM on 26.10.2025 from Cuddalore Government Hospital,

3) The enquiry reports of vacant doctors of Government Head Quarters Hospital Cuddalore for the complaint one Dhasarinarayanan S/o Sankar, Pazhaniyappa Nagar, Nallathur, Cuddalore against LW2 and Dr.Manimaran who were on duty on 26.10.2025

ஆகியவற்றை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு கடலூர் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு இம்மனுவில் குறிப்பிட்டுள்ளது.

**3. எதிர் உரையின் சுருக்கம்:-**

அரசு தரப்பில் தாக்கல் செய்து எதிர் உரையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குவிமுச பிரிவு 91 மனுவினை தகுதியான காரணங்கள் அடிப்படையில் கோரியிருந்தால் மட்டும் அனுமதிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:-**

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 91ன் கீழான மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்று பார்க்கும்பொழுது, இவ்வழக்கானது கடந்த 2016 ம் ஆண்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 10 வருடங்களாக நிலுவையில் உள்ளது. இவ்வழக்கானது, இவ்வழக்கின் 3வது எதிரி தசரிநாராயணன் த.பெ சங்கர் என்பவருக்கு சாலை விபத்தில் அடிப்பட்டு, பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை

செய்துக்கொண்டு மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்தவருக்கு அவசர பிரிவில் இருந்த மருத்துவர்களான சாட்சி 1 அருண்சாம் மற்றும் சாட்சி 2 மணிமாறன் ஆகியோர்கள் பணியில் இருந்தபோது, 3வது எதிரிக்கு வைத்தியம் செய்துவிட்டு, நுண்கதிர் புகைப்படம் எடுக்க நுண்கதிர் Form கொடுத்துள்ளார்கள். அப்போது 3வது எதிரியானவர் தொலைபேசியில் 1 மற்றும் 2 வது எதிரிகளை வரவழைத்து சாட்சிகளிடம் வெளியே அழைத்து செல்கிறேன் என்று சொல்லி வெளியே அழைத்து சென்று பின்பு இரவு 20.30 மணிக்கு எதிரிகள் மூவரும் சாட்சிகளான மருத்துவர்களை பார்த்து நாங்கள் வெளியே நுண்கதிர் படம் எடுத்துவிட்டோம் அதில் கொடுங்காயம் என்று உள்ளது நீங்களும் கொடுங்காயம் என்று எழுதுங்கள் என்று சொன்னதற்கு சாட்சி 1 மருத்துவர் அருண்சாம் எதிரிகளை பார்த்து நீங்கள் இங்கே நுண்கதிர் படம் எடுங்கள் அதை பார்த்துவிட்டு தருகிறேன் என்று சொன்னதற்கு எதிரிகள் 1 மற்றும் 2 இருவரும் நாங்கள் வெளியே படம் எடுத்துவிட்டோம் வெளியே எடுத்ததும் ஒரு டாக்டர்தானே. நீங்க என்ன புண்ட டாக்டரு நாங்கள் சொல்ரதைதான் ஜட்ஜியே மாத்தி எழுதுவாரு நீங்க எழுதமாட்டீங்களா என்று திட்டி, சாட்சிகளை பணி செய்யவிடாமல் தடுத்தும், சாட்சிகளை பார்த்து நீங்க வெளியே வந்தா தொலைச்சி கட்டிவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளது தெரியவருகிறது. மேலும் இவ்வழக்கில் இன்றுவரை சாட்சிகளின் விசாரணை தொடங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் எதிரிகள் தரப்பில் கோரியுள்ள

1) Original AR Entry Book from 1.00 PM to 10.00 PM on 26.10.2025 from Cuddalore Goverment Hospital,

2) Call details records of Doctor for emergency ward on 1.00 PM to 10.00 PM on 26.10.2025 from Cuddalore Government Hospital,

3) The enquiry reports of vacant doctors of Government Head Quarters Hospital Cuddalore for the complaint one Dhasarinarayanan S/o Sankar, Pazhaniyappa Nagar, Nallathur, Cuddalore against LW2 and Dr.Manimaran who were on duty on 26.10.2025 ஆகியவை வழக்கிற்கு தொடர்பில்லாத ஒன்று என்றும், சம்பவ தேதி வேறு (26.10.2015), மனுவில் கோரியுள்ள ஆவணங்களின் தேதி வேறு (26.10.2025) என்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கானது ஏற்கனவே 10 வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது என்பதை

கருத்தில் கொண்டும், மேலும் எதிரிகள் தரப்பில் இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் நோக்கத்திலும், இந்நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிக்கவேண்டும் என்ற நோக்கத்திலும் இம்மனுவானது தாக்கல்செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.05.21 17:49:13 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
கடலூர்.